*கவனிக்க.- 2017.02.09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2007 - 2017 පෙබරවාරි මස 17 වැනි සිකුරාදා - 2017.02.17

*2007 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | – |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | 34 |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 36 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


***கவனிக்க.-*** *குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2017, பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

***முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2017, மாச்சு மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல்

திருத்தம்

## நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம் - நியமனங்கள்

நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்களினால் 1990 ஆம் இலக்க 2016.10.21 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் செய்யப்பட்ட நியமனம் கீழ்க் குறிப்பிட்டவாறு திருத்தம் செய்யப்படுகின்றது.-

1. கண்டி, வட்டபுலுவ, போமலுவ வீதி, இல. 105/3 என்னுமிடத்தில் வதியும் திருமதி திசாநாயக்க முதியன்சேலாகே சாமனி ஷாலிகா தில்ருக்சி திசாநாயக்க அவர்களை கண்டி நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

நீல் டீ அல்விஸ்,
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு 7,
2016, திசெம்பர் 26.

2-756

---

## நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம் - நியமனங்கள்

நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்கள் கீழ்க் குறிப்பிட்ட நியமனங்களைச் செய்துள்ளார் :-

1. எம்பிலிப்பிட்டிய,கும்பகொட வீதி, இல. 07 என்னுமிடத்தில் வதியும் செல்வி விதாரண கங்காணம்கே ஹர்ஷி நிரோஷிகா அவர்களை எம்பிலிபிட்டிய நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

2. தெஹிவளை, களுபோவில, த சில்வா வீதி, இல. 23/8 ஏ என்னுமிடத்தில் வதியும் செல்வி சேனாபதிகே குலமிணி திலங்கா மெண்டிஸ் அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

3. தெஹிவளை, களுபோவில, த சில்வா வீதி, இல. 23/8 ஏ என்னுமிடத்தில் வதியும் திரு. சுவந்த ஆரச்சிகே தொன் உதார சம்பத் குமார சுவந்த ஆரச்சி அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்களமொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

4. கொழும்பு 06, வெள்ளவத்தை, ஹார்மர்ஸ் அவனியூ, இல. 11- 1/1 என்னுமிடத்தில் வதியும் செல்வி சிவகுமார் மிலக்சனா அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

5. கொழும்பு 12, புனித செபஸ்தியன் மேடு, இல. 34/43 , சட்டத்தரணிகள் அலுவலகக் கட்டிடத்தொகுதி என்னுமிடத்தில் வதியும் செல்வி கோதாகொட ஜயரத்னகே கௌசல்யா கயத்திரி கோதாகொட அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

6. மாத்தறை, பாலட்டுவ, அத்துடாவ, பிட்டகொரட்டுவ, இல. 132/ஏ, 'சம்பத்' என்னுமிடத்தில் வதியும் செல்வி ஜயசேகர விதாரணகே நில்மிணி வாசனா அவர்களை மாத்தறை நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

7. மொரட்டுவை, கட்டுபெத்த, பண்டாரநாயக்க மாவத்தை, முதலாவது ஒழுங்கை, இல. 71/2ஈ என்னுமிடத்தில் வதியும் திரு. அந்ரவாஸ் பட்டபெந்திகே ஷெஹான் திலங்க த வாஸ் குணவர்த்தன அவர்களை பாணந்துறை நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

8. வத்தளை, ஹெந்தலை, கெரவலப்பிட்டிய வீதி, இல. 378/65 என்னுமிடத்தில் வதியும் திரு. ஜெகநாதன் தட்பரன் அவர்களை கம்பஹா நீதாசன வலயத்தினில் தமிழ் மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

9. கொழும்பு -08, எலியட் இடம், இல. 22/1 என்னுமிடத்தில் வதியும் செல்வி சனுஷி சுமாயா ஹேமந்த அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

10. உடதுந்திரிபிட்டிய, போனேகல, இல. 2/2 என்னுமிடத்தில் வதியும் திருமதி ஜயசுந்தர பதிரன்னே ஹெலாகே பியுமி கிம்ஹானி அவர்களை கம்பஹா நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

11. புத்தளம், தில்லையடி, கொழும்பு வீதி, 3 ஆவது குறுக்கு வீதி, இல. 14 என்னுமிடத்தில் வதியும் திரு. செய்யது முஹம்மது முஹம்மது தஸ்னீம் அவர்களை புத்தளம் நீதாசன வலயத்தினில் தமிழ் மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

12. பொரலெஸ்கமுவ, கட்டுவாவல, சுஹத மாவத்தை, இல. 141 என்னுமிடத்தில் வதியும் அலுத்கே தொன் கிஹான் சாமிக அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

நீல் டீ அல்விஸ்,
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு 7,
2017, சனவரி 05.

2-757/1

---

## நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம் - நியமனங்கள்

நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்கள் கீழ்க் குறிப்பிட்ட நியமனங்களைச் செய்துள்ளார் :-

1. யட்டியாந்தோட்டை, இஹல கராகொட, இல. ஏ416/1 என்னுமிடத்தில் வதியும் திருமதி காரியவசம் சித்தரகே ராணி அவர்களை அவிசாவலை நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

2. பொரலெஸ்கமுவ, வாவி வீதி, இல. 665 என்னுமிடத்தில் வதியும் திருமதி தோன சந்துனி மதுகா ஜயசூரிய அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

3. வேயாங்கொடை, வல்கம்முல்ல, இல.73 என்னுமிடத்தில் வதியும் திருமதி விக்ரம ஆரச்சிகே கல்பனி வாசனா முணசிங்க அவர்களை கம்பஹா நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

4. உலப்பனை, தேவாலவத்த, இல. 93/32 என்னுமிடத்தில் வதியும் திரு.மொஹமட் முபாரக் ரிஸ்வான் அவர்களை கண்டி நீதாசன வலயத்தினில் தமிழ் மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

5. கும்புக்வெவ, தியாவ, இல. 468/1 என்னுமிடத்தில் வதியும் திரு. விஜயசுந்தர முதியன்சேலாகே இந்துனில் ருவன் பண்டார விஜயசுந்தர அவர்களை குருநாகல் நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

6. கிரிலப்பன, மொரகல, இல. 334/ஏ என்னுமிடத்தில் வதியும் திருமதி ரத்நாயக்க முதியன்சேலாகே வத்சலா திலக்சி ஹேரத் அவர்களை மாத்தறை நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

7. நாத்தாண்டிய, இஹல மாவில, 'கந்தகொல்ல நிவாச' , இல. 78/ஏ என்னுமிடத்தில் வதியும் செல்வி ரத்னாயக்க முதியன்சேலாகே சச்சினி செவ்வந்தி ரத்நாயக்க அவர்களை சிலாபம் நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

8. கொழும்பு 15, மட்டக்குளி, சென்மேரிஸ் ஒழுங்கை, இல. 75/1 என்னுமிடத்தில் வதியும் செல்வி நீட்டா ஷோபினி சிவயோகம் அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் தமிழ் மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

9. பொல்கம்பல, கொஹிலதெனிய என்னுமிடத்தில் வதியும் செல்வி ஹால்பந்தெனி ஹேவகே கோஷலா செவ்வந்தி அவர்களை களுத்துறை நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

10. மினுவன்கொடை, உன்னாருவ, இல. 11/சீ என்னுமிடத்தில் வதியும் செல்வி தினயாதுரகே திலானி ஷாலிகா அவர்களை நீர்கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

நீல் டீ அல்விஸ்,
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு 7,
2017, சனவரி 02.

2-757/2

---

## நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம் - நியமனங்கள்

நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்கள் கீழ்க் குறிப்பிட்ட நியமனங்களைச் செய்துள்ளார் :-

1. அநுராதபுரம், ஹிதோகம, குருவிட்ட , இல. 78 என்னுமிடத்தில் வதியும் திரு. சிறிவர்தன முதியன்சேலாகே சுசில் கிருஷான் சிறிவர்தன அவர்களை அநுராதபுரம் நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

2. கல்கமுவ, மஹனான்னேரிய, பாடசாலை வீதி, என்னுமிடத்தில் வதியும் திரு. ராஜகருணா ஹேரத் முதியன்சேலாகே சுசில் நிஷாந்த ராஜகருணா அவர்களை குருநாகல் நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

3. கொத்தட்டுவ, புதிய நகரம், 'வெதநிவாச' , இல. 97/3 என்னுமிடத்தில் வதியும் திருமதி ரஷ்னிகா லசானி லியனகே அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

4. கொழும்பு 7, எலெக்ஸ்சான்ரா இடம், இல. 47 என்னுமிடத்தில் வதியும்செல்வி உத்பலா சொனாலி ரணகல அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

5. கொழும்பு 7, எலெக்ஸ்சான்ரா இடம், இல. 47 என்னுமிடத்தில் வதியும் செல்வி ஹங்சி யசொதரா அபயரத்ன அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

6. மரதன்கடவல, இஹலபுளியன்குளம், இல. 190 என்னுமிடத்தில் வதியும் திருமதி செய்னுல் ஆப்தீன் ரிபாஸா பானு அவர்களை அநுராதபுரம் நீதாசன வலயத்தினில் தமிழ் மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

7. தெவலபொல, கனிஹிமுல்ல, உடுகம்பொல வீதி, இல. 100/සී என்னுமிடத்தில் வதியும் திருமதி ஹசினி பியுமாலி விக்ரமசிங்க அவர்களை நீர்கொழும்பு நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

8. கொடகவெல, ரங்வல, புரன்வத்த என்னுமிடத்தில் வதியும் செல்வி உடகம மனன்னலாகே வத்சலா மஹிந்த அவர்களை இரத்தினபுரி நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

9. கொழும்பு 12, டாம் வீதி, இல. 371 என்னுமிடத்தில் வதியும் செல்வி மொஹமட் நசார் பாத்திமா பசானா அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக;

10. ஹோமாகம, புகையிரத நிலைய வீதி, இல. 106/2 என்னுமிடத்தில் வதியும் திரு. வமக ஹசிந்து சமரகோன் அவர்களை அவிசாவளை நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

நீல் டீ அல்விஸ்,
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு 7,
2017, சனவரி 02.

2-757/3

## நானாவித அறிவித்தல்கள்

### தைபா இஸ்லாமிய கற்கைகள் வளாகத்தினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

எம். எஸ். தௌபீக் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "தைபா இஸ்லாமிய கற்கைகள் வளாகத்தினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த கல்லூரியைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

(1) மனித நேயம் மற்றும் ஆன்மீக நடவடிக்கைகளை மேம்படுத்தல்;

(2) சிறார்களின் கல்வியை மேம்படுத்தல்;

(3) இனங்களுக்கிடையில் சமாதானத்தை வளர்த்தலும்

பிறவும்.

எம்.எஸ்.தௌபீக்,
பாராளுமன்ற உறுப்பினர்.
(தேசியப் பட்டியல்)

2-655

### இஸ்லாமிய தஃவா நிலையத்தினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

எம். எஸ். தௌபீக் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "இஸ்லாமிய தஃவா நிலையத்தினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த நிலையத்தினைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

(1) சிறார்களின் கல்வியை மேம்படுத்தல்;

(2) இனங்களுக்கிடையில் சமாதானத்தை வளர்த்தல்;

(3) நாட்டின் அபிவிருத்தியில் பங்கேற்றலும்

பிறவும்.

எம்.எஸ்.தௌபீக்,
பாராளுமன்ற உறுப்பினர்.
(தேசியப் பட்டியல்)

2-656

## பெனசோமா பிரன்ட்சிப் பௌன்டேசனைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ஹெக்டர் அப்புஹாமி ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "பெனசோமா பிரன்ட்சிப் பௌன்டேசனைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

(அ) ஜப்பானிய தொழில்நுட்பம் மற்றும் கரிம உர உற்பத்தி தொடர்பாக விவசாயிகளுக்கு அறிவூட்டுமுகமாக இலங்கையில் மாதிரி விவசாயத் திட்டங்களை ஆரம்பித்து வைத்தல்;

(ஆ) சோளம் சார்ந்த உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் ஏனைய தானியங்களை உற்பத்தி செய்வதற்கு ஊக்கம் மற்றும் உதவிகளை வழங்குவது;

(இ) அவர்களது உற்பத்திகளுக்கு புதிய சந்தை வாய்ப்புக்களை அறிமுகம் செய்வதும்

பிறவும்.

ஹெக்டர் அப்புஹாமி ,
பாராளுமன்ற உறுப்பினர்.

2-658

---

## புற்றுநோய் பராமரிப்பு நம்பிக்கை நிதியத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

எட்வட் குணசேகர ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "புற்றுநோய் பராமரிப்பு நம்பிக்கை நிதியத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்ட மூலமொன்றைப் பாராளு மன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

(1) புற்றுநோயினால் பாதிக்கப்படுவோருக்கும் அவர்களது குடும்பத்தினருக்குமான நலன்புரி விடயங்களை வழங்குதல்;

(2) புற்றுநோயினால் பாதிக்கப்பட்டோரின் ஆன்மீக ரீதியான , உள ரீதியான, சமூக மற்றும் பொருளாதார ரீதியான நிலைமைகளை மேம்படுத்தல்;

(3) புற்றுநோய்களைத் தடுத்தல், முன்கண்டறிதல், புற்றுநோய் எனக்கண்டறிதல் மற்றும் புற்று நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சையளிப்பு மற்றும் நோய்த்தணிப்பு போன்றன குறித்தான பராமரிப்புச் சேவைகளை வழங்குதல் குறித்தான பொது மக்களுக்கான அறிவூட்டல்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் முன்னெடுத்தல்;

(4) இலங்கையிலும்,வெளிநாடுளிலும் நோய்த்தணிப்பு மருத்துவத்தை/பராமரிப்பினை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளலும்

பிறவும்.

எட்வட் குணசேகர ,
பாராளுமன்ற உறுப்பினர்.

2-850